**செய்தி வெளியீடு எண்: 137/2023** **நாள்: 27.11.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு பசுமை சாம்பியன் விருது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இந்திய பசுமை கட்டிட கவுன்சில் (IGBC) வழங்கும் உயரிய விருதுகளில் ஒன்றான பசுமை சாம்பியன் விருதை பெற்றுள்ளதாக மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. இந்தியாவில், பசுமை வெகுஜன விரைவு போக்குவரத்து அமைப்பு (MRTS) இயக்கத்தை முன்னெடுத்து வரும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சிறப்பான பங்களிப்பைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. "பசுமை கட்டுமான அமைப்பு" (Green Building Congress) நிகழ்வின் ஒரு பகுதியாக 2023, நவம்பர் 24-ஆம் தேதி சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக திட்ட இயக்குநர் திரு.டி.அர்ச்சுனன் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தனது அனைத்து நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததற்காக சமீபத்தில் இரண்டு சிறப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளது. கடந்த வாரம் நவம்பர் 20, 2023 அன்று லண்டனில், நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் பசுமை கட்டுமான அமைப்பிலிருந்து 2023 ஆம் ஆண்டிற்கான “க்ரீன் ஆப்பிள்” விருது தரவரிசையில் தங்கம் வென்றுள்ளது. முன்னதாக ஏப்ரல் 24, 2023 அன்று அமெரிக்காவின் மியாமியில் நடைபெற்ற மற்றொரு விருது வழங்கும் விழாவில் பசுமை அமைப்பிலிருந்து 2023 ஆம் ஆண்டின் சிறந்த சுற்றுச்சூழல் நடவடிக்கைகளுக்கான பசுமை உலக விருதில் வெள்ளி வென்றுள்ளது.

இவ்விருதுகள், காற்றின் தரத்தை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் வளங்களை பாதுகாத்தல், சூரிய சக்தியை அதிக அளவில் பயன்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தி கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கான தனது பணியை அங்கீகரிக்கும் வகையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்த விருதுகள், சென்னை மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்து உள்கட்டமைப்பை உருவாக்குவதில் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதிலும் செயல்படுத்துவதிலும் முன்னணியில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிலையை எடுத்துக்காட்டுகின்றன, மேலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும், நிறுவனத்தின் ஒப்பந்ததாரர்கள் உட்பட அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்களுக்கும் தரம் மற்றும் நிலையான வளர்ச்சியில் சிறந்து விளங்க தொடர்ந்து பாடுபடுவதற்கு பெரும் ஊக்கத்தை அளிக்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**